# 16

# பிறர்க்குதவுதல்



## HELPING OTHERS

# 16

## எப்படி உதவக்கூடாது?

### HOW NOT TO HELP

**1**

தானதர்மம் கட்டாயமல்ல என்று கருதக்கூடாது.

**2**

எதுவும் உங்களுக்குச் சொந்தம் என்றெண்ணக்கூடாது.

**3**

கஞ்சத்தனமாய் இருக்கக்கூடாது.

**4**

குழுவாகவே செயல்படக் காத்திருக்கக்கூடாது.

**5**

பயனாளிகளைத் தெரிந்தெடுக்கப் பயப்படக்கூடாது.

**6**

விழாக்காலங்களோடு தானதர்மத்தை நிறுத்தக்கூடாது.

**7**

தானதர்மத்தை விளம்பரப்படுத்தக்கூடாது.

**8**

பயனாளிகளைக் கடனாளிகளாக்கக்கூடாது.

**9**

சோம்பேறித்தனத்தை ஊக்குவிக்கக்கூடாது.

**10**

தானதர்மம் செய்வதில் தளரவே கூடாது.

# 16

# எப்படி உதவக்கூடாது?

## அறிமுகவுரை

■ தாம் படைத்ததெல்லாம் நல்லதென்று கடவுள் கண்டார்;
ஒன்று மட்டும் *''நல்லதல்ல''* என்றார் —

''உதவிக்கு யாருமில்லாத மனிதன்'' (ஆதி 2:18)

பிறரது உதவி ஒருபோதும் தேவைப்படாத நபர் உலகில் எவருமிலர்.
ஆனால், எங்கும் தலைவிரித்தாடும் தன்னலத்தால்
உதவி ''செய்வதைவிட'' உதவி ''பெறவே'' மனிதன் விரும்புகிறான்.

■ தானதர்மமானது கிறிஸ்தவத்தில் பின்னிப் பிணைந்தது.

கிறிஸ்தவம் இன்றித் தானதர்மம் இருக்கலாம்;
தானதர்மம் இன்றிக் கிறிஸ்தவம் இருக்கமுடியாது.

அப்படியானால் ''கிரியைகளின்'' மார்க்கத்தை ஊக்குவிக்கிறோமா?
நமது இரட்சிப்பு விசுவாசத்தின்மூலம் கிருபையினால்தானே?
ஆம், *''நற்செயல்களினால்'' அல்ல, ''நற்செயல்களுக்காய்''*
*இரட்சிப்பு* (எபே 2:8-10)

— ''நியாயப்பிரமாணத்தின்'' கிரியைகளினால் அல்ல (கலா 2:16);
''விசுவாசம் மற்றும் அன்பின்'' கிரியைகளுக்காக (எபி 6:10; கலா 5:6)

அதைத்தான் அப்போஸ்தலன் யாக்கோபு வலியுறுத்துகிறான் —
யாக் 2:14,17 ... *செயலில்லா விசுவாசம் செத்தது.*

அதாவது,
எபேசியரில் பவுல் இரட்சிப்புக்கு ''முன்னுள்ள'' கிரியைகளையும்,
யாக்கோபு தனது நிருபத்தில் இரட்சிப்புக்குப் ''பின்வரவேண்டிய''
கிரியைகளையும் குறிப்பிடுகின்றனர்.

''நற்செயல்கள்'' இரட்சிப்புக்கு நிபந்தனை அல்ல, நிரூபணம்.

## எப்படி உதவக்கூடாது?

### 1. தானதர்மம் கட்டாயமல்ல என்று கருதக்கூடாது.
Do not consider charity optional.

■ பழைய ஏற்பாட்டில் யேகோவாவின் நாமங்களில் அடிக்கடி வருவது—
*''சகாயர்''* "Helper"
(உ-ம்) சங் 54:4அ ... *''தேவன் எனக்குச் சகாயர்''*

புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது,

தேவ குமாரனானவர் ''முதலாம் தேற்றரவாளன்'' எனப்படுகிறார்;
தேவ ஆவியானவர் ''இரண்டாம் தேற்றரவாளன்'' எனப்படுகிறார்.
*தேற்றரவாளன்* = உதவியாளர்
Comforter = Helper
யோ 14:16

இவ்விதம் திருத்துவத்தில் மூவருமே உதவியாளராயிருப்பதால்,
அவரது பிள்ளைகள் வேறு விதமாய் இருக்கமுடியாது —
எபே 5:1 ... *''பிள்ளைகள்'' போல் தேவனைப் பின்பற்றுங்கள்*

■ தானதர்மமின்றிக் கிறிஸ்தவம் இருக்கமுடியாது —
கிறிஸ்தவப் பக்திமுயற்சிகள் ஒவ்வொன்றும் தானதர்மத்துடன்
இணைந்திருப்பதை இவ்வத்தியாயத்தில் பார்ப்போம் —

□ முதலாவதும் அதேபோல் முக்கியமானதுமான
*இரண்டாம்* ***கற்பனை:***
மத் 22:37-39 ... ஒரு வழக்கறிஞனுக்கு இயேசுவின் பதில்
— இரண்டாவது, இரண்டாந்தரமானது அல்ல!

இன்னொரு வழக்கறிஞன் கேட்டது: *''எனக்கு அயலான் யார்?''*
நல்ல சமாரியன் கதையை இயேசு பதிலாக்கினார் (லூக் 10:29-37).

வேறு வார்த்தைகளில்,
தேவையுள்ளோருக்கு உதவுவது தேவனை நேசிப்பதற்குச் சமம்!

☐ கிறிஸ்தவ வாழ்வு **மனந்திரும்புதலில்** துவங்குகிறது —

(உ-ம்) திருமுழுக்கினன் யோவான்

*மனந்திரும்புதலின் கனிகள்: ''நாங்கள் என்ன செய்யவேண்டும்?''*

லூக் 3:11 ... இல்லாதோரோடு ஆடையையும்

ஆகாரத்தையும் பகிருங்கள்.

நேபுகாத்நேச்சாரைத் தானியேல் மனந்திரும்ப அழைத்தபோது எளியவர்க்கு உதவச் சவாலிட்டான் —

தானி 4:27 ... *''சிறுமையானவர்களுக்கு இரங்கி ...''*

☐ கிறிஸ்தவ வாழ்வின் முதல் ஆசீர்வாதம் **இரட்சிப்பு.**

(உ-ம்) சகேயு (லூக் 19:8,9)

*''பாதியை ஏழைகளுக்கு ... இன்று இரட்சிப்பு''*

☐ கடவுளிடம் *''அப்பா பிதாவே''* என்று **ஜெபிப்பதே**

தேவப் பிள்ளைகளின் மாபெரும் சிலாக்கியம் —

ஆனால் தானதர்மமில்லாத ஜெபம் அர்த்தமற்றது —

ஏசா 1:15-18 ... *மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும்* ...

மலைப்பிரசங்கத்தில் இயேசுவானவர் முதலாவது தானதர்மத்தையும், அதற்கடுத்துதான் ஜெபத்தையும் உபவாசத்தையும் போதித்தார்:

மத் 6:1-4, 5-15, 16-18

கொர்நேலியுவின் காரியத்தில்,

*''ஜெபங்களும் தானதர்மமும்''* சேர்ந்து கடவுளுக்குமுன் நினைப்பூட்டுதலாய்ச் சென்றன (அப் 10:2,4)

☐ தானதர்மமின்றி **உபவாசமும்** கடவுளுக்கு ஏற்புடையதல்ல —

ஏசா 58:5,6,7 ... *''தேவனுக்குகந்த உபவாசம்''*

குறிப்பாக, வச 7 ... *உணவு, உடை, உறைவிடம்* இல்லாதோர்

□ இன்று எங்கும் **துதி, ஆராதனையில்** ஒரு புத்தார்வம்.

இந்தப் பரவசத்தில், தானதர்மத்தை மறந்துவிடக்கூடாது —

எபி 13:15,16 ... *"துதி ... ஸ்தோத்திர பலி ... தானதர்மம்"*

நாம் மட்டும் ஆடிப்பாடினால் போதாது;

எளியவரையும் குதூகலிக்கச் செய்யவேண்டும் —

(உ-ம்) யோபு 29:13ஆ ... *விதவையின் இதயத்தைப் பாடச்செய்தேன்*

□ திருப்பணிக்குக் **கொடுப்பது** தானதர்மத்தைவிட மேலானதல்ல—

நீதி 19:17 ... *"கர்த்தருக்குக் கடன்"*

*"தசமபாகம்"* vs. *"விசேஷித்தவை"* — மத் 23:23

□ அடுத்து, **பிரசங்கித்தல்** —

நமது பிரதான இலக்கு யாராய் இருக்கவேண்டும்?

லூக் 4:18 ... *"தரித்திரர்க்குப் பிரசங்கிக்க அபிஷேகம் ...*

*நொறுங்குண்டோரை விடுதலையாக்க ..."*

முதல் மிஷனரிகளாகிய பவுலையும் பர்னபாவையும்

பேதுரு, யாக்கோபு, யோவான் வழியனுப்பியபோது —

கலா 2:9,10 ... *"தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்"*

□ **எழுப்புதல்** குறித்து எவ்வளவோ பேசுகிறோம்.

படிப்பினைகளுக்கு நெகேமியாவை மேற்கோள் காட்டுகிறோம்.

அவனது பணிக்கு இரு பரிமாணங்களிருந்தன —

ஆன்மீக எழுப்புதல் **அத்துடன்** சமுதாய சீர்திருத்தம்.

அத்தியாயங்கள் 3,4இல் மதில் கட்டுமானம்;

அத்தியாயம் 5இல் சொந்தத் தியாகத்தால் எளியவர்க்குதவி.

பெந்தெகொஸ்தே எனும் எழுப்புதலிலும் நடந்தது இதுவே:

அப் 2 & 4 ... அருள்மாரியும் வாரி வழங்கலும்

2:44,45; 4:32-37

எனவேதான் மனந்திரும்புதலுக்கும் ஆதிநிலையேகுதலுக்கும் இறைமக்களைக் கூவியழைத்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர் சமூக அநீதிக்கும், எளியவரை ஒடுக்குதலுக்கும் எதிராய்க் குரல் எழுப்பினர் —

(உ-ம்) ஆமோஸ் 2:6,7; 4:1; 5:10-12; 6:1,8,12; 8:5

☐ இறுதியாக **இரண்டாம் வருகை** —

மத் 25:34-46 ... செம்மறியாடுகள் (வலது பக்கம்)

வெள்ளாடுகள் (இடது பக்கம்)

நீங்கள் செம்மறியாடா, வெள்ளாடா?

■ எனவே நாம் வந்துசேரும் முடிவு:

கிறிஸ்தவமே தானதர்மம்தான்!

தானதர்மமே கிறிஸ்தவம் என்று சொல்லவில்லை;

கிறிஸ்தவமே தானதர்மம் என்கிறோம்!

உண்மையான மார்க்கத்திற்கு வரையறை —

யாக் 1:27... முதலாவது தானதர்மம், அடுத்து கறைபடா வாழ்வு!

■ ஆம், தானதர்மம் நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, கட்டாயம்!

(ஆயிரக்கணக்கான தமிழ்க் கிறிஸ்தவப் பாடல்களில் தானதர்மத்தைக் குறித்தவை அபூர்வம்; மார்க்கம் சாராத தமிழ்ச் சமூகப் பாடல்களிலோ இக்கருத்துள்ளவை அதிகம்;
கிறிஸ்தவம் இவ்விதம் பின்தங்கியிருப்பதேன்?)

## 2. எதுவும் உங்களுக்குச் சொந்தம் என்றெண்ணக்கூடாது.

Do not think you own anything.

- தேவையுள்ளோருக்கு உதவும் மனப்பான்மையை நம்மில் வளர்க்க இச்சத்தியமே அடிப்படையானது.

  கிறிஸ்தவ ஈகையெனும் உபதேசத்திற்கு அடித்தளமும் இதுவே.

- **கடவுளே** எல்லாவற்றிற்கும் ''சொந்தக்காரர்'' (Owner);

  **நாமோ** அவற்றிற்குப் ''பொறுப்பாளர்'' (stewards) அல்லது ''பயன்படுத்துவோர்'' (users) என்றே பைபிள் எங்கும் போதிக்கிறது.

  ☐ சங் 50:12 ... *''நான் பசியாயிருந்தால் ... உலகம் எனது''*

  இதற்கு மறுமொழியாக **நாம்** சொல்லவேண்டியது —

  சங் 89:11 ... *''அவையெல்லாம் உம்முடையவை!''*

  இன்னும் சில திருவசனங்கள் —

  ☐ லேவி 25:23 ... *''நிலம் எனது ... நீங்களோ பரதேசிகள்''*

  ☐ ஆகாய் 2:8 ... *வெள்ளி ... பொன் ... என்னுடையது*

  இந்த அறிவே பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தரைக் கீழ்க்கண்டவாறு அறிக்கையிடச் செய்தது —

  ☐ தாவீது: 1 நாளா 29:14 ... *உமது கரத்தில் வாங்கி ...*

  ☐ கடவுள் விடும் சவால்:

  யோபு 41:11 ... *எனக்கு ''முதலாவது'' கொடுத்தது யார்?*

  இச்சத்தியம் புதிய ஏற்பாடெங்கும் பரவியுள்ளது —

  ☐ ரோ 11:36 ... *அவரால் ... அவர்மூலம் ... அவருக்காய் ...*

  கொலோ 1:16,17 ... *எல்லாம் அவராலும் அவருக்காகவும் படைப்பு*

- நமக்கிருப்பதெல்லாம் கடவுளின் **தயாளத்தினாலேயே** —

  யாக் 1:5 ... *சம்பூரணமாய்க் கொடுக்கிறவர் ...*

  அப் 17:25 ... *எல்லாம் கொடுக்கிறவர் ... அவருக்கு ஒன்றும் தேவையில்லை*

  (அத்தேனே நகரவாசிகளிடம் பவுல்)

  ரோ 8:32 ... *எல்லாவற்றையும் அருளுகிறவர் ...*

■ இச்சத்தியம் நெடுங்காலமாய் மறக்கப்பட்டுப்போயிற்று;
பெந்தெகொஸ்தே நாளன்றுதான் இது புத்துயிர் பெற்றது —
தன்னார்வச் செயல்: அப் 2:44,45 ... *தேவைக்கேற்றபடி பகிர்ந்து ...*
4:32 ... *தன்னுடையதென்று ஒருவனும்* ***சொல்லவில்லை!***

இதுவே நமது சபைகளிலும் ஆன்மீகப் புரட்சியைக் கொண்டுவரும்—
*''மிகுந்த வல்லமை''* (வச 33)

■ தேவனே யாவற்றிற்கும் சொந்தக்காரரானதால்,
தமது அநாதி தீர்மானத்தின்படிச் சிலருக்கு **அதிகமாகவும்,**
மற்றவர்களுக்குக் **குறைவாகவும்** கொடுக்கிறார் —

நீதி 22:2...*செல்வந்தனையும் தரித்திரனையும் உண்டாக்கியவர்*
29:13 ... *இருவரது கண்களுக்கும் வெளிச்சம் தருபவர்*

பிறரைவிட நமக்கு அதிகம் இருந்தால், அது நமக்குச் சொந்தமல்ல —
□ நாம் கொண்டு வந்ததும் எடுத்துச் செல்வதும் ஒன்றுமில்லை
பிர 5:15 ... *நிர்வாணமாய் வந்தோம் ...*
*நிர்வாணமாய்த் திரும்புவோம்* (யோபு 1:21)

இது புதிய ஏற்பாட்டில் ஆமோதிக்கப்பட்டுள்ளது —
1 தீமோ 6:7 ... *கொண்டுவந்தது ஒன்றுமில்லை ...*
*கொண்டுபோவது ஒன்றுமில்லை ... ''நிச்சயம்''*

எனவே மேட்டிமை எண்ணம் கூடாது —
1 கொரி 4:7 ... *உன்னைச் சிறந்தவனாக்குவது யார்?*

□ கடின உழைப்பால் சம்பாதித்ததாயிருந்தாலும் —
உபா 8:17,18 ... *என் கை ... என்று சொல்லாதே*

■ நம்மூலம் பிறரை ஆசீர்வதிக்கவே கடவுள் நம்மை ஆசீர்வதிக்கிறார் :
— அதற்காகத்தான் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டார்
ஆதி 12:2,3 ... *உன் மூலம் குடும்பங்கள் யாவும் ...*

— தேவன் நமது தேவைக்குமேல் நமக்குக் கொடுத்திருந்தால்,
அது தேவையுள்ளோரோடு பகிர்ந்துகொள்ளவே.

இந்தச் சமநிலைக் கொள்கையைப் பவுல் வெகுவாய் வலியுறுத்தினான் —

2 கொரி 8:13,14 ... *"அவர்கள் செல்வம் ... உங்கள் வறுமை"*
பணக்காரன் இன்னும் பணக்காரன் ஆவதற்கும்,
ஏழை இன்னும் ஏழை ஆவதற்கும் ஆண்டவர் எதிரி!

— அளவுக்குமீறிச் செல்வம் குவிப்பதை அவர் கண்டிக்கிறார்:

☐ ஏசா 5:8 ... *"வீட்டோடு வீடு ... வயலோடு வயல் ... ஐயோ!"*
ஆறு ஐயோக்களில் முதல் வருவது (வச 8,11,19,20,21,23)

☐ ஓர் அரசன்கூட செல்வம் குவிக்கக்கூடாதாம்:

உபா 17:17 ... *"மனைவிகள் ... மனைகள் ... பெருக்கவேண்டாம்!"*
எவ்வளவு கொடூரம், பாருங்கள்!

எனவேதான் நீதிமொழிகளில் ஒரு நேர்த்தியான வேண்டல் :
நீதி 30:8,9... அதிகம் வேண்டாம், குறைவு வேண்டாம்.
அதாவது, பொருளாதாரத்தில் ஓரங்கள் கூடாது —
சமநிலை வேண்டும்.

■ ஒருவேளை ஏற்கனவே நீங்கள் செல்வந்தராயிருந்தால்,
அல்லது ஆண்டவர் செல்வத்தைக் கூட்டிக்கொண்டேயிருந்தால் —

☐ சகேயு போல, 50 சதவீதத்தை உங்களுக்கு வைத்துக்கொண்டு,
அடுத்த 50 சதவீதத்தை எளியவர்க்குக் கொடுத்துவிடுங்கள்.

தீர்க்கர்களிலெல்லாம் பெரியவனான
திருமுழுக்கினன் யோவானின் போதனை இதுவே (லூக் 3:10,11)

உங்கள் எதிர்காலத்திற்கு நியாயமான சேமிப்பு இருக்கட்டும்.

☐ Colgate-Palmolive Company நிறுவனர் Mr. William Colgate
என்ற அமெரிக்கரைப்போல —
கடவுளுக்கும் எளியவருக்கும் 10% கொடுக்கத் துவங்கி ...
20% ... 40% ... 100% என்று கூட்டினார்!
இன்று காலை இந்தப் பற்பசைதான் பயன்படுத்தியிருப்பீர்!

- ☐ எல்லாவற்றையும் பிள்ளைகளுக்கே விட்டுச் செல்லாதீர்.
  உக்கிராணத்துவப் பொறுப்பு உங்கள் மீதுதான்.

  சொந்த சாட்சி:

  எங்கள் மகளுக்கு: எனது சேமிப்புகளில் மூன்றிலொன்று அவளுக்கு;
  மூன்றிலிரண்டு கடவுளுக்கும் எளியவருக்கும்.

- ■ ஆஸ்வால்ட் சான்டர்ஸ் (1902-1992) என்பவரின் சவால் —
  ''நமது'' பணத்தில் கடவுளுக்கும் எளியவருக்கும் எவ்வளவு
  கொடுக்கவேண்டும் என்பதல்ல, ''கடவுளது'' பணத்தில்
  நாம் எவ்வளவு வைத்துக்கொள்ளலாம் என்பதே கேள்வி!

- ■ **கூடுதல் கருத்துக்கள்**

  - ☐ தங்களது எதிர்காலத்திற்காய் ஓரளவாவது சேமித்து வைக்க
    சிலர் காலமெல்லாம் உழைக்கவேண்டியதிருக்கும்.
    மற்றவரோ 5 அல்லது 10 ஆண்டுகளில் இதை முடித்துவிடுவர்.
    அப்படிப்பட்டவர்கள் தங்களுக்காய்ச் சம்பாதிப்பதை நிறுத்தி,
    அடுத்து சம்பாதிப்பதையெல்லாம் கடவுளுக்கும்
    எளியவருக்கும் கொடுத்துவிடவேண்டும் (1 தீமோ 6:17-19).

  - ☐ வெள்ளியை விரும்புபவன் திருப்தியடையான் (பிர 5:10)

  - ☐ பிள்ளைகளுக்கு ''எல்லாவற்றையும்'' விட்டுச் செல்வதை
    2 கொரி 12:14; நீதி 19:14 போதிக்கவில்லை;
    பிள்ளைகள் வாழ்க்கையைத் துவங்க உதவவேண்டுமென்பதே
    இவ்வசனங்களின் பொருள்.

- ■ **நான் சிபாரிசு செய்கிறேன் ...**

  *Stewardship Study Bible (NIV)*

  உக்கிராணத்துவம் எனும் பொருளைத் திருமறையெங்கும்
  தொகுத்தளிக்கும் சவால் நிறைந்ததோர் ஆங்கில ஆராய்ச்சி வேதம்

## 3. கஞ்சத்தனமாய் இருக்கக்கூடாது.
Do not be stingy.

■ தானதர்மத்தைக் குறித்துக் கடவுள் பேசும்போதெல்லாம்,
**தயாள குணத்தை** வலியுறுத்துகிறார் —

□ உபா 15:7,8 ... *உன் இதயத்தைக் கடினமாக்காது ...*
*கையைத் தாராளமாய்த் திறந்து ...*
:11 ... *கையைத் தாராளமாய்த் திற ... கட்டளை ...*

□ உபா 24:19 ... *அரிக்கட்டு ... மறந்தால் ... திரும்பிப் போகாதே*
:20 ... *ஒலிவமரம் ... இரண்டாம் பறிப்பு வேண்டாம்*
:21 .... *திராட்சை ... இரண்டாம் அறுப்பு வேண்டாம்*
:22 ... *நீ* (சாத்தானுக்கு) *அடிமையாய் இருந்தாய் ...*
*நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்!*

அதாவது, விளைச்சலோ, லாபமோ, எல்லாம் நமக்கல்ல!

□ நமது மூதாதையர் தயாளராயிருந்தனர் ...
அவர்கள் நன்றாயிருந்தனர் ...
எரே 22:15-17

*''நீயோ''* (இன்றையத் தலைமுறை) பேராசையுள்ளவன்.

மூதாதையர் கொஞ்சம் சம்பாதித்தனர், நிறைய கொடுத்தனர்;
நாமோ நிறைய சம்பாதிக்கிறோம், கொஞ்சமே கொடுக்கிறோம்!

□ கஞ்சத்தனம் கடவுளுக்கு அருவருப்பு:
அதைச் *''சோதோமின் பாவம்''* என்கிறார் —
எசேக் 16:49

□ நீதி 11:24-26 ... *உதார குணமுள்ளோருக்கு* ஆசீர்வாதம்

■ ஆவிக்குரிய கிறிஸ்தவர் அநேகரது பிரச்னை:
திருப்பணிக்குக் கொடுப்பதில் தயக்கமில்லை;
தானதர்மம் என்றதும் கை சுருங்கிவிடும்.

திருமறையோ ''தசமபாகத்தைப்'' பலமுறை தானதர்மத்துடன் இணைக்கிறது —

☐ உபா 14:28,29 ... *பரதேசி ... திக்கற்றவன் ... விதவை ...*
*அவர்கள் **திருப்தியடையும்படி** ...*

☐ மல் 3:10 ... தசமபாகம் பற்றிய பிரபல வசனம் —
எதற்காக? *''**ஆகாரம்** இருக்கும்படி''*
ஆகாரமில்லாதோருக்குத்தானே ஆகாரம்?

☐ புதிய ஏற்பாட்டு நிருபங்களில் ''தசமபாகம்'' குறித்த உபதேசமே கிடையாது.

கொடுத்தலைப் பற்றிய விரிவான பகுதி —
2 கொரி 8 & 9

இதன் சூழமைவு திருப்பணிக்குக் கொடுப்பது **அல்ல**;
மாறாக, எளியவர்க்கு உதவுதல் —
9:1,12 ... *''ஏழைப் பரிசுத்தவான்களுக்குச் சகாயம்''*

பெருவாரியாய்த் தவறாய்ப் பயன்படுத்தப்படும் வசனம் —
*''உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியம் ...''* (9:7)

இது ''எளியவர்க்குக் கொடுப்பதைப்பற்றியது'' தெரியுமா? —
வச 9 ... *வாரியிறைத்தான் ... ஏழைகளுக்குக் கொடுத்தான் ...*

இது சங்கீதம் 112:9இன் மேற்கோள்.
2 கொரி 8 & 9ஐத் தியானித்து,
ஏழைக்கிரங்கும் இறைவனது இதயத்தைப்
புரிந்துகொள்ளுங்கள்.

இச்சத்தியத்தை நாம் தழுவிக்கொள்ளாவிடில், தவறவிட்ட வாய்ப்புகளுக்காய் வருந்தி நித்தியத்தில் தலை கவிழ வேண்டியதிருக்கும் —

மத் 25:42 ... *பசியாயிருந்தேன் ... ஆகாரம் கொடுக்கவில்லை*

கடவுளுக்குக் கொடுப்பது எளியவருக்குக் கொடுப்பதல்ல;
எளியவருக்குக் கொடுப்பதோ கடவுளுக்குக் கொடுப்பதாம்.

- கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நன்னடத்தையுடன் வாழ்வதில் அந்தப் பணக்கார வாலிபனுக்குப் பிரச்னையில்லை;
செல்வத்தை எளியவர்க்கு வழங்கவேண்டுமென்றபோதோ மாட்டிக்கொண்டான் — லூக் 18

அடுத்த அத்தியாயத்திலேயே (லூக் 19),
50 சதவீதத்தை எளியவர்க்குக் கொடுத்துவிடத்
தன்னார்வமாய்த் தீர்மானித்த சகேயுவைச் சந்திக்கிறோம்.

- எளியவர்க்குத் ''தானதர்மம்'' மட்டுமல்ல, ''விருந்து'' பண்ணும்படியும் நம்மை இயேசு அழைக்கிறார் — லூக் 14:12-14
பணக்காரருக்கு விருந்தளிக்க, அப்பப்பா, எவ்வளவு செலவழிக்கிறோம்!

- தயாளமாயிருக்கமுடியாத அளவு தரித்திரர் எவருமில்லை —
(உ-ம்) மக்கெதோனியக் கிறிஸ்தவர்

2 கொரி 8:1-4 ... *கொடிய தரித்திரம் ... மிகுந்த உதாரத்துவம்*
நிறைய வசதி இல்லாவிடினும்,
முதலாவது *''மனவிருப்பம்''* உண்டாகவேண்டும் (வச 12)

''நிறையப் பணமிருந்தால் எளியவர்க்கு நிறைய செய்யலாம்''
என்றெல்லாம் சொல்லாதீர் —
இவ்விதச் சாக்குப்போக்கில் மறைந்திருப்பதென்ன தெரியுமா?

''பணம் இல்லாதிருந்தபோது கொடுக்க மனமிருந்தது;
பணம் வந்துவிட்டபோதோ கொடுக்க மனமில்லை!''

*படுவேதனையில் பரம வெற்றி (Tortured for Christ)* எனும் நூலில்
ரிச்சர்ட் உம்பிராண்ட் (1909-2001) —

ஒவ்வொரு பத்தாம் நாளும் அவருக்குக் கிடைக்கும்
**அனுதின** சூப்பை அவரைவிடப் பலங்குன்றிய
சிறைக்கைதிக்குக் கொடுத்துவிடுவாராம்;
ஒவ்வொரு பத்தாம் வாரமும் அவருக்குக் கிடைக்கும்
**வாராந்திர** ரொட்டியை அவரைவிடப் பலங்குன்றிய
சிறைக்கைதிக்குக் கொடுத்துவிடுவாராம்!

- நமது வாழ்க்கையின் தேவையை நாம் கூட்டிக்கொண்டே போனால்,
நாம் பிறரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியாது!
நமது ஆடம்பரம் பிறரது அடிப்படைத் தேவையை மறுக்கும் (யாக் 5:4,5)

- **கூடுதல் கருத்துக்கள்**
  - ☐ ஏராளமாய்ப் பெற்றீர்கள்; தாராளமாய்க் கொடுங்கள்! (மத் 10:8)
  - ☐ எந்த உதவியும் மிகப் பெரிதோ, மிகச் சிறிதோ கிடையாது!
    *"ஒரு குவளை தண்ணீர்"* (மத் 10:42; மாற் 9:41)
  - ☐ அச்சிறுவனின் தயாள குணம் திரள்களின் பசியாற்றியது (யோ 6:9)
  - ☐ ஜான் வெஸ்லி:

    *உன்னாலியன்ற நன்மை அனைத்தையும் செய்,*
    *உன்னால் முடிந்த அனைவருக்கும் செய்,*
    *உன்னால் இயலும் அனைத்திடங்களிலும் செய்,*
    *உன்னால் முடியும் அனைத்து வழிகளிலும் செய்!*
  - ☐ லூக் 6:38 ... *அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி* ...
    சூழமைவு: தானதர்மம் (வச 30அ, 36)
- Godfrey Thring (1823-1903) என்பவரின் பாடல்:

  *தேவா, உம் பிள்ளைகள் கொடுக்கத் துடிக்கட்டும்;*
  *கரங்களும் இதயமும் தாராளமாய்த் திறக்கட்டும்;*
  *அன்பின் பிரமாணம் முழுக்க நிறைவேறட்டும்;*
  *எவரையும் தேற்றித் தூக்கிட விரையட்டும்;*
  *காணிக்கை என்பதே தொழுகையாய் மாறட்டும்;*
  *கிருபாசனம் முன் வந்து பணியட்டும்!*

## 4. குழுவாகவே செயல்படக் காத்திருக்கக்கூடாது.

Do not always wait for group action.

■ தானதர்மம், உதவியற்றோர்க்கு ஆதரவு என்றவுடன்
நமது நினைவுக்கு வருவது —
மிஷனரி இயக்கங்கள்,
நிவாரணப்பணி நிறுவனங்கள்,
சமூகத் தொண்டு அமைப்புகள் ... இவைதான்.

இது சரி **அல்ல.**

''தனிப்பட்டவரது'' பொறுப்பைத் தட்டிக்கழிக்க
இது வசதியாகிவிட்டது.

எளியோர்க்கு உதவுவதிலும், நாதியற்றோரைத்
தாங்குவதிலும் முதலில் வரவேண்டியது
''தனிநபர்'' ஈடுபாடு என்றே பைபிள் எங்கும் போதிக்கிறது.

■ இதை வலியுறுத்தும் சில வசனப்பகுதிகள் —

☐ சங் 41:1-3 ... *சிறுமைப்பட்டவன்மேல் ''சிந்தையுள்ளவன்''...*
(இப்பகுதியில் ஒருமையே பயன்படுத்தப்பட்டுள்ளது!)

☐ நீதி 21:13 ... *ஏழையின் கூக்குரலைக் ''கேளாதவன்''* ...

☐ தனி நபர் ஈடுபாட்டிற்கு யோபு சிறந்ததோர் எடுத்துக்காட்டு —
யோபு 29:12-17 ... ***நான்*** *விடுவித்தேன்* ... ***நான்*** *மகிழ்வித்தேன்*
***நான்*** *கண்ணாய், காலாய் இருந்தேன்.*
யோபு 31:16-22 ... ***நான்*** *செய்யாதிருந்தால்* ...

☐ முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர் பஞ்சத்தில் அவதி —
அப் 11:27-29 ... *''அவரவர்'' திராணிக்கேற்ப*
*பணம் சேகரித்து அனுப்ப ...*
:30 ... உதவி அனுப்பட்டதுதான் ஒரு ''குழு'' மூலம்

சுவாரசியமாக,

அந்தியோகியாவிலுள்ள இவர்கள் *''கிறிஸ்தவர்கள்''* என்று
அழைக்கப்பட்டதையடுத்து **முதல்** செயல்பாடு இதுவே (வச 26)!

☐ நிவாரணப் பணிக்காய்ச் சபைகளுக்கு எழுதியபோது
''தனி நபர்'' ஈடுபாட்டைப் பவுல் வலியுறுத்தினான் —
1 கொரி 16:1,2 ... *அவனவன் ... தன் தன் ...*

இது அவனது முன்மாதிரியாயும் இருந்தது —
அப் 20:34,35 ... *''நான்''* ***காண்பித்தேன் ...***

தனி நபர்களே செய்யக்கூடியவற்றால்
சபையைப் பாரப்படுத்தக்கூடாது என்றும் போதித்தான் —
(உ-ம்) *விதவைகள்* (1 தீமோ 5:16)

ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் ஓர் அனாதைப் பிள்ளையைத்
தத்தெடுத்தால், அனாதை இல்லங்கள் ஏன்?

☐ எளியோர்க்கு உதவுவதில் **''தனிநபர்''** ஈடுபாட்டைத்
தட்டிக்கழிப்போர்க்கு யாக்கோபு சவாலிடுகிறான் —

யாக் 2:15,16 ... *''உங்களில் ஒருவன்'' சொல்வானானால் ...*
அது செத்த மார்க்கமாம் (வச 17)

☐ தனிநபர் ஈடுபாட்டிற்குத் தப்புவது
ஒருவன் *''தன்னை ஒளித்தலாம்''* — ஏசா 58:7
அதைப்பற்றி ''எனக்கென்ன?''
அது ''அவன்'' பிரச்னை!

■ கொடுத்தலையும் நேசித்தலையும் பற்றிப் பேசும்போது,
இயேசுவானவர் தலையாயக் கொள்கை ஒன்று கொடுத்தார் —

லூக் 6:31 ... *பிறர் உங்களுக்குச் செய்ய நீங்கள்*
*விரும்புவதையே அவர்களுக்கும் செய்யுங்கள்*
(வச 30 ... கொடுத்தல்; வச 32 ... நேசித்தல்)

(உ-ம்) ஒரு வேளை சாலையில் அடிபட்டுக் கிடக்கிறீர்கள்!

நல்ல சமாரியன் கதையின் மூலம்
இயேசு போதிக்க விரும்பியது இதுவே.
''தனிநபர்'' செயல்பாடு நிறைந்த சம்பவமிது (லூக் 10:33-35)

ஆசாரியனும் லேவியனும் நிறுவனச் சிந்தையால் நிறைந்திருந்தனர்;
தங்களது ''சொந்தப்'' பொறுப்பையோ மறந்துவிட்டனர்.

தன்னால் இயன்றதையெல்லாம் சமாரியனோ செய்தான்:

முதலுதவி / மருத்துவமனையில் சேர்ப்பு / இராத்தங்கல் /
செலவழித்தல் / தொடர்பணி ... *''நான் திரும்ப வரும்போது ...''*

சமீப காலத்தில் இப்படி ஏதும் செய்திருக்கிறீர்களா?

நல்ல சமாரியனைப் போல
தனி நபராய்த் தேவையிலுள்ள எவருக்கும் உதவவேண்டுமானால்,
''நேரம், பலம், பணம்'' செலவழிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

இயேசு படிப்பித்த நீதி: *''நீயும்* ***போய்*** *அப்படியே* ***செய்!''*** (வச 37)

ஒருவர் இவ்விதம் சொன்னார் —

குனிந்து மக்களைத் தூக்கிவிடுவதற்கு மேலான
உடற்பயிற்சி இருதயத்திற்கு இல்லை!

■ குழுவாகவே, நிறுவனமாகவே செயல்பட நினைத்தால்,
நமது வாசலில் கிடக்கும் லாசருவை மறந்துவிடுவோம் (லூக் 16:19-31).
தொலைவிடங்களையே யோசித்துக்கொண்டிராதீர்.
நிவாரண நிறுவனங்களைத் தாங்குவதிலேயே திருப்தியடையாதீர்.

☐ தேவையுள்ளவனுக்கு நல்ல அயலானாயிருங்கள் (நீதி 27:10).
*தூரத்திலுள்ள சகோதரனைவிட நல்ல அயலானே மேல்!*

சில நேரங்களில், வேதனையிலிருப்பவருடன்
சும்மா கூட இருப்பதே பேருதவி!

இன்னொரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தும் மெழுகுவர்த்தி
இழப்பதொன்றுமில்லை!

## ■ முடிவுரை

கடவுள் *''ஒவ்வொருவனுக்கும்'' அவனவனது செயல்களின்படிப் பலனளிப்பார்* (வெளி 22:12)

## ■ கூடுதல் கருத்துக்கள்

☐ எங்காவது வன்முறையைப் பார்த்தால், பலவீனருக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் இயன்றதைச் செய்யுங்கள் —
(உ-ம்) மோசே (யாத் 2:16,17)
சபையாரைத் திரட்ட அடுத்த ஓய்வுநாள் வரை மோசே காத்திருக்கவில்லை!

☐ ஊமையனுக்காய் வாய் திறந்து பேசுங்கள் —
நீதி 31:8,9

குணசாலியான பெண்ணின் வருணனையை (வச 10-31) எத்தனை முறை தியானிக்கிறோம், விவரிக்கிறோம்! அதற்கு முந்திய இரு வசனங்களை விட்டதேனோ?

☐ ஆசாரியருக்கும் லேவியருக்கும் எப்பொழுதுமே
*''ஆலயம் ... ஆலயம் ... ஆலயம்''*தான்;
*''அந்நியர், திக்கற்றோர், விதவைகள்''*
குறித்த கவலையே கிடையாது (எரே 7:1-7).

## 5. பயனாளிகளைத் தெரிந்தெடுக்கப் பயப்படக்கூடாது.

Do not be overcautious in choosing beneficiaries.

■ யாருக்கு உதவி தேவையெனக் கண்டறிவது அவசியம்;
ஆனால், அளவுக்குமீறி கவனமாயிருந்தால், உண்மையாகவே
உதவி தேவைப்படுவோரைக் காணத் தவறக்கூடும்.

☐ *''நான் அந்நியனாயிருந்தேன்''* என்றார் இயேசு (மத் 25:35,43)

☐ பைபிள் தரும் அறிவுரை: எபி 13:2
*''அந்நியரை'' உபசரியுங்கள்.*
அந்நியர் என்றால், அவர்கள் தேவையிலிருக்கின்றனர்
என்பது தவிர, நமக்கு ஒன்றும் தெரியாது!

அவர்களுக்கும் *''சகோதர சிநேகம்''* காட்டவேண்டும் (வச 1)
அந்நியரை உபசரித்த ஆபிரகாமை எபி 13:2 குறிப்பிடுகிறது —
(ஆதி 18:1-22)

ப.ஏ. — ஆதி 18 — **தேவதூதர்** அந்நியராய் வந்தனர்.
பு.ஏ. — மத் 25 — **இயேசு** ''அந்நியனாய் வந்தேன்'' என்கிறார்!

■ *''எல்லாருக்கும்''* நன்மை செய்யவே அழைக்கப்பட்டுள்ளோம் —

☐ கலா 6:10 ... *''எல்லாருக்கும்''* ... முக்கியமாய் விசுவாசிகளுக்கு
☐ 1 தெச 3:12 ... *''ஒருவருக்கொருவர்''* (= விசுவாசிகள்)
**அத்துடன்** *''மற்றெல்லா''* மனிதருக்கும்
☐ பரந்த நோக்கில் பார்த்தால்,
படைப்பாண்டவராக தேவன் ''எல்லாருக்கும்'' தந்தை, இரட்சகர் —
1 தீமோ 4:10 ... *''எல்லாருக்கும்'' இரட்சகர்*
(முக்கியமாய் விசுவாசிகளுக்கு)

மலைப் பிரசங்கத்தில் இதைத்தான் இயேசு சுட்டிக்காட்டினார் —
மத் 5:45,48 ... *விண் தந்தை ... மழை ... சூரிய உதயம் ...*
இதுவே *''பூரணம்''* (வச 48)

■ நமது பகைவருக்கும் உதவும்படித் திருமறை நம்மைத் திட்டமாய் அழைக்கிறது —

☐ யாத் 23:4,5 ... *சத்துரு* மட்டுமல்ல, அவனது *கழுதையும்!*

☐ இந்த நற்குணத்தில் தாவீது மிஞ்சினான்

(உ-ம்) 2 சாமு 9:3 ... ***தேவன்*** *பொருட்டு நான் தயை செய்யும்படி* ***சவுல்*** *குடும்பத்தில் யாருமுண்டா?*

மேவிபோசேத் அறிமுகம் —

(வச 3ஆ,13) — *"இரு கால்களும் முடம்"*

ஒன்றுமே செய்ய இயலாதவன்!

மேவிபோசேத்தின் அறிக்கை —

*"நான் செத்த நாய் போன்றவன்"* (வச 8)

முன்னால் ஆட்சி செய்தவருள் உயிரோடிருக்கும் எவனும் என்றுமே ஆபத்தானவனாய்க் கருதப்படுவான்!

☐ இரு ஏற்பாடுகளிலும் வலியுறுத்தப்பட்டுள்ள சத்தியம் —

நீதி 25:21,22 ... *சத்துருவுக்கு ஆகாரம் கொடு*

ரோ 12:20 ... *சத்துருவுக்கு ஆகாரம் கொடு*

நண்பர் வட்டத்திற்குள்ளேயே நின்றுவிடுதல் மானிடம்; எதிரிகளுக்கு உதவுவதோ தெய்வீகம்.

☐ எதிரிகளை நேசித்து அவர்களுக்கு உதவுவதற்கு அதிவுன்னத எடுத்துக்காட்டு கிறிஸ்துவின் மரணமே —

ரோ 5:6 ... *நாம் பலவீனராயிருக்கையிலேயே ...*

:7,8 ... *நாம் பாவிகளாயிருக்கையிலேயே ...*

:10 ... *நாம் சத்துருக்களாயிருக்கையில் ...*

கிறிஸ்துவின் மரணம் மட்டுமல்ல,
நமக்கு வரமருள அவர் பரமேறியதும் —

சங் 68:18 (எபே 4:8)... *துரோகிகளுக்கு... வரங்கள் ...*

☐ யூதனொருவன் சமாரியரிடம் தண்ணீர்கூட கேட்கமாட்டான்.
நல்ல சமாரியனோ ஓர் யூதனுக்கு உதவ கலாச்சார வேலிகளையும் தாண்டினான் (லூக் 10)

ஆம், தானதர்மம் என்று வரும்போது இனமோ மார்க்கமோ குறுக்கிடக்கூடாது!

(உ-ம்) எபிரெயர் vs. கிரேக்க விதவைகள் (அப் 6)

■ எளியவன் ஏழையாகவும் தேவையுள்ளவனாகவும் இருப்பதொன்றே அவனுக்குதவ நமக்குக் காரணமாயிருக்கவேண்டும் —

உபா 15:11 ... *''ஆகையால் ...''*

கிறிஸ்தவரின் தானதர்மச் செயல்கள் கிறிஸ்தவரல்லாதோரைக் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் ஈர்க்கலாம்;
ஆனால் எளியவர்க்கு உதவுவதில் இது நமது நோக்காய் இருக்கக்கூடாது.
இல்லையேல், தானதர்மமும் லஞ்சமாகிவிடும்.
இவ்விதச் செயல்கள் ஈசாக்குகளையல்ல,
இஸ்மவேல்களையே பிறப்பிக்கும்.

(உ-ம்) திருமுழுக்கிற்கு ஒப்புக்கொடுப்போருக்குப் புத்தாடைகள்.
மார்க்க *''பலிகளை''* அல்ல, *''இரக்கத்தையே''*
ஆண்டவர் விரும்புகிறார் —

மத் 12:6,7 ... *''தேவாலயத்திலும் பெரியவர்''*
ஒவ்வொன்றிற்கும் மார்க்க வர்ணம் தேவையில்லை.

☐ மார்க்கம் சாராத நிவாரணக் குழுக்களின் நோக்கங்களும் செயல்களும் சரியானதாய் இருக்கும்வரை,
அவற்றிற்கும் நாம் ஒத்துழைப்பு தரலாம்.

☐ விசுவாசிகளாகுமுன்னரே கடவுள் நம்மை ஆசீர்வதிக்கவில்லையா?
விசுவாசிகளாகுமுன்னரே நாம் பிற விசுவாசிகளிடமிருந்து
உதவிகள் பெறவில்லையா?

■ அப்படியானால் ஒரு கேள்வி:

*''சீடன்''* அல்லது *''தீர்க்கன்''* எனும் பெயரில்
*''ஒரு கலசம் தண்ணீர்''* கொடுப்பதென்றால் என்ன?

பன்னிருவரை அனுப்புகையில் குறிப்பாய் அவர்களுக்காய் இயேசு சொல்லிய வார்த்தைகள் இவை (மத் 10).

அதாவது, *“பலாபலனை”* வலியுறுத்த (வச 42)

- பயனாளிகளைத் தெரிந்தெடுப்பதில் அளவுக்குமீறிய கவனம் கூடாது; அதே வேளையில், தேவையில்லாதிருக்கும்போது, கேட்கப்படாதிருக்கும்போது, உதவிகளைத் திணிக்காதீர்!

யோசியாமல் உதவிகளைத் தூக்கியெறியாதீர்.

ஆத்திரப்பட்டு எவருக்கும் பிணைப்படுவதையும் (Pledge) திருமறை எச்சரிக்கிறது (நீதி 6:1-5)

விழிப்புடனும், ஜெபத்துடனும், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் கலந்தாலோசித்து, ஈடுபடுதல் பாதுகாப்பு!

## 6. விழாக்காலங்களோடு தானதர்மத்தை நிறுத்தக்கூடாது.

Do not confine charity to special occasions.

- நம்மில் பலர் கிறிஸ்துமஸ், பிறந்த நாட்கள், ஆண்டு விழாக்களோடு தானதர்மச் செயல்களை நிறுத்திவிடுகிறோம்.
டிசம்பர் மாதத்தை ஈகையின் ''காலம்'' என்றுகூட அழைக்கிறோம்!

— ஆண்டுக்கொருமுறைதான் கிறிஸ்துமஸா என்கின்றனர்
பிச்சைக்காரர்! கிறிஸ்துமஸ் அன்று காலையில் கிடைக்கும்
அத்தனை இட்லி, இனிப்புகளை வைத்து என்ன செய்வது?

— டிசம்பர் மாதத்தில் மட்டும் அத்தனைபேர் தங்களைப் பார்க்க
வருகிறார்களே என்று சிறைக்கைதிகள் வியக்கின்றனர்!

— அனாதை விடுதிகள், முதியோர் இல்லங்கள், தொழுநோயாளி
காலனிகளில் இருப்போருக்கும் இதே நிலைதான்.

சிறப்புக்கால தானதர்மம் என்பது பைபிள் போதிப்பதல்ல.

புதிய ஏற்பாட்டுச் சபைக்கு வேத போதனை:
1 கொரி 16:1,2 ... *வாரத்தின் முதல் நாள் தோறும்* ...

அப்போஸ்தலன் ஏன் *''முதல் நாள்''* என்றான்?

வாரத்தின் முதல் நாள் நிகழ்ந்த இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து (யோ 20:1) ஆதிக் கிறிஸ்தவர் ''முதலாம் நாளிலேயே'' கூடிவரத் துவங்கினர் — (உ-ம்) அப் 20:7

இதுவே இந்நாள் வரை வழக்கத்தில் இருந்துவருகிறது.
இந்த முதல் நாளில் சபை கூடிவருதலை
நாம் ''ஞாயிறு ஆராதனை'' என்கிறோம்.

''ஞாயிறு ஆராதனையைத்'' தொடர்ந்து,
''ஞாயிறு தானதர்மமும்'' இருந்தாலென்ன?
எபி 13:15,16இன் தாற்பரியம் இதுதானே?

ஆம், தானதர்மம் சிறப்புக் காலங்களில் மட்டுமல்ல,
நெடுகவே செய்யப்படவேண்டியது!

ப.ஏ. உபா 15:11 ... *எளியவர் இல்லாதிருப்பதில்லை ... ஆகையால் ...*

பு.ஏ. யோ 12:8 ... *தரித்திரர் எப்பொழுதும் உங்களோடு ...*

''நாம் எப்பொழுதும் தரித்திரரோடு'' என்று சொல்லமுடியுமா?

*''அனுதின'' அப்பத்திற்காய்* நாம் ஜெபிப்பதில்லையா?
எளியவருக்கு நாம் *''அனுதின'' ஆகாரம்* கொடுக்கவேண்டாமா?
(யாக் 2:15,16)

2012 ஜனவரி 11, *The Hindu* செய்தித்தாளில் வந்தது —
''42 சதவீத இந்தியக் குழந்தைகள் ஊட்டச்சத்தின்றி எடை குறைவு!''

பிரதமர் மன்மோகன் சிங்: ''இது ஒரு தேசிய அவமானம்!''

ஒரு பொன்மொழி: ''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
தன் பிள்ளை தானாக வளரும்!''

- நற்செயல்களைச் *''செய்துகொண்டே''* இருக்கவேண்டும் —
  தீத் 3:8,14
  வச 8 ... *திட்டமாய்* (நெடுகவே) *போதி ... பழகட்டும் ...*

- *தரித்திரரை ''நினைத்துக்கொள்ள''* அழைக்கப்பட்டுள்ளோம் (கலா 2:10)
  *பகிர்ந்துகொள்ள ''மறக்கக்கூடாதாம்''* (எபி 13:16)

தரித்திரர் எப்பொழுதும் நமது **மனதில்** இடம்பெறவேண்டுமென்பதே
இவ்விரு வசனங்களின் கருத்து.

- சபையிலுள்ள ஏழை விதவைகளைப் பராமரிப்பதே ''உதவிக்காரர்''
  நியமிக்கப்பட்டதின் ''முதல்'' நோக்கம் (அப் 6:3)

அப் 6இல் அவர்கள் *''உதவிக்காரர்''* என அழைக்கப்படாவிடினும்,
*''பந்தி விசாரணைக்காரர்''* என்பதற்கும் *''உதவிக்காரர்''* என்பதற்கும்
கிரேக்க மூலச் சொல் ஒன்றே.

இது ''நெடுகவே'' செயல்படவேண்டியதொன்று;
எனவேதான் பவுல் பின்னர் உதவிக்காரரின் தகுதிகளைப்
பட்டியலிட்டான் (1 தீமோ 3:8-11)

கொர்நேலியு *''ஜெபங்களையும் ... தானதர்மங்களையும்''*
**நெடுகவே** செய்துகொண்டிருந்தான் (அப் 10:1,2)

எளியவரை நண்பராக்கவும் (நீதி 14:20;19:7),
தாழ்ந்தவருடன் பழகவும் (ரோ 12:16) இது ஒன்றே வழி.
*''குறைவில் உதவி செய்யுங்கள்''* (ரோ 12:13)

■ தானதர்மத்தைத் தள்ளிப்போடக்கூடாது —

நீதி 3:27,28 ... **இன்று** நீங்கள் செய்யக்கூடியதை ...

''நன்றே செய்; இன்றே செய்!''
சீக்கிரம் கொடுக்கிறவன் இருமடங்கு கொடுக்கிறானாம்!

— கவர்ச்சிகர விளம்பர வேண்டுகோள்களுக்குக் காத்திராதீர்!
— கேட்டால் கொடுக்கலாமென்று காத்திராதீர்!
உங்கள் கண்கள் திறந்திருந்தால், எளியவரிடம் கடவுள் நடத்துவார்.
தரித்திரர் இருக்குமிடம் தேடிச் செல்லுங்கள்.

■ உதவி செய்வதை வழக்கமான பாணிக்குள் நிறுத்தக்கூடாது —

☐ நெடுஞ்சாலைப் பயணங்களின்போது எளியவர்க்குக் கொடுக்க
சேலை, வேட்டி, துண்டு எடுத்துச்செல்வீர்.
☐ அரசின் திட்டங்களால் ஏழைகள் பயனடைய உதவுவீர்.
☐ ஏழைக் குழந்தைகளைத் தத்தெடுத்து,
செலவுகளைப் பொறுப்பெடுப்பீர்.
☐ அவ்வப்போது ''எளியோர் விருந்து'' என நடத்துவீர்.
☐ நிவாரணப்பணி நிறுவனங்களுக்கு உயில் எழுதிவைப்பீர்.
☐ மூத்த குழந்தையின் உடைகளை
அடுத்த குழந்தைக்காய் வைக்காதீர்.
☐ ஆடைகள், காலணிகளைக் கிழியும்வரை பயன்படுத்தாதீர்.
☐ ஒரு புதிய ஆடை கிடைத்ததும்
பழையதொன்றைக் கொடுத்துவிடுவீர்.
☐ இறந்தபின் உறுப்பு தானத்திற்காய்ப் பதிவு செய்வீர்.

## 7. தானதர்மத்தை விளம்பரப்படுத்தக்கூடாது.
Do not publicize charity.

■ மலைப் பிரசங்கத்தில் ஆண்டவர் போதித்த பக்திமுயற்சிகளில்
முதலில் வருவது ''தானதர்மம்'' செய்வதுதான் —
அதிலும் முதல் படிப்பினை:
தானதர்மத்தைத் தம்பட்டம் அடிக்காதே! (மத் 6:1-4)

இதைத்தான் ''இரகசிய ஒழுக்கம்'' (Discipline of Secrecy) என்கிறோம்.
இரகசிய தானதர்மமே தானதர்மத்தின் இரகசியம்!
Charity in secret is the secret of charity!

தானதர்மம் விளம்பரப்படுத்தப்படும் இரு இடங்களை
இயேசு சுட்டிக்காட்டினார் —
அ) *''ஆலயங்கள்''*
— திருச்சபையிலுள்ள எளியோர்க்கு உதவுதல்
ஆ) *''தெருக்கள்''*
— சமுதாயத்திலுள்ள எளியோர்க்கு உதவுதல்

அப்படியானால், மத் 5:16இன் பொருளென்ன?
*''உங்கள் நற்செயல்கள் ... உங்கள் வெளிச்சம்''*

இது முன்மாதிரியான நமது வாழ்க்கையைக் குறிக்கிறது —
*''உப்புத்தன்மை''* (வச 13) Saltiness
*''வெளிச்சம்''* (வச 14,15) Brightness

''மாயக்காரர் போல'' செய்யாதிருங்கள் (6:2)
மாய்மாலம் = இதயப்பூர்வமின்மை
அதாவது, நோக்கத்தில் நேர்மையின்மை.
அதாவது, உள்ளிலிருந்து வராத தானதர்மம்.

■ தானதர்மச் செயல் எதுவும் அன்பினால் பிறக்கவேண்டும் —

☐ நல்ல சமாரியன்

அது *''மனதுருக்கத்தில்''* துவங்குகிறது (லூக் 10:33)

அதைத் தொடர்ந்துதான் செயல்பாடுகள்!

☐ மக்களை இயேசு குணமாக்கியதெல்லாம்

''மனதுருக்கத்தின்'' வெளிப்பாடே —

மத் 14:14 ... திரள்களில் நோயுற்றோரைக் குணமாக்குதல்

மத் 20:30 ... இரு குருடர்: *''எங்களுக்கு இரங்கும்!''*

மாற் 1:40,41 ... தொழுநோயாளி சுகம்பெற்றது

மாற் 5:19 ... *லேகியோன் ... கர்த்தர் உனக்கு இரங்கிச் செய்ததை வீட்டிற்குப் போய் அறிவி.*

லூக் 7:13 ... நாயினூர் விதவை ... *அவள்மீது இரங்கினார் ...*

மாற்கு சுவிசேஷத்தில் மட்டும்,

*''ஒருவருக்கும் சொல்லாதே''* என்று இயேசு 7 முறை சொன்னார்!

☐ பாசமற்ற தானதர்மம் ''பயனற்றது'' —

1 கொரி 13:3 ... *எனக்குள்ளதை ''எல்லாம்'' கொடுத்தாலும் ...*

இது சாத்தியமா?

கொடுக்காமல் அன்பு செலுத்தமுடியாது;

ஆனால் அன்பில்லாமல் கொடுக்கமுடியும்!

☐ தானதர்மம் செய்ய இரண்டே காரணங்கள் —

அ) கடவுளுக்குக் கீழ்ப்படிதல் — உபா 15:11 ... *கட்டளையிடுகிறேன்*

24:19-22 ... *கட்டளையிடுகிறேன்*

ஆ) மக்கள்மீது கனிவிரக்கம்

(உ-ம்) சிறைச்சாலை ஊழியம் (எபி 13:3) ...

*அவர்களோடு கட்டு ...*

இவையே நமது பிரதான உந்துவிசைகளாயிராவிடில்,

விளம்பரமே நமது குறியாயிருக்கும்.

*''உமது இதயத்தை உடைப்பது எனதையும் உடைக்கட்டும்!''*

— Bob Pierce, World Vision

நமது தேவன் *ஏழைகளின், திக்கற்றோரின், விதவைகளின்* தேவன்! அவரது பெயரே *''இரக்கங்களின் பிதா''* என்பதே (2 கொரி 1:3)

■ *வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும்* (மத் 6:3) இதன் பொருளென்ன?

— செய்ததையும் கொடுத்ததையுமே நினைத்துக்கொண்டிராதீர்.

— இரக்கம் காட்டினவன் அமைதியாயிருக்கவேண்டும்;
இரக்கம் பெற்றவன் அதைக்குறித்துப் பேசவேண்டும்!
உ-ம்) தொற்காள் (அப் 9:36-39)
*விதவைகள் ... அழுது ... காண்பித்து ...*

— இருதயம், ஈரல், நுரையீரல், மூளை, நீரகங்கள் போன்ற நமது உள்ளுறுப்புகள் எவ்விதம் பகட்டோ, பந்தாவோ இல்லாது அமைதியாய்ச் செயல்படுகின்றன!
அவை பழுதடையும்வரை நாம் அவற்றை நினைப்பதேயில்லை!

— ஓர் அடிப்படைச் சட்டம்: (நீதி 27:2)
நீ செய்ததைப் பெருமையடிக்காதே; மற்றவன் புகழட்டும்.

■ தானதர்மச் செயல்களின் புகைப்படங்களை வெளியிடும் பத்திரிகைகள், நாட்காட்டிகள் பற்றி?

இதை முடிந்த அளவு குறைத்துக்கொள்ளவேண்டும்.
நியாயமான பாணியில் பகிர்ந்துகொள்வதற்கும்
அத்துமீறிய விளம்பரத்திற்கும் வேறுபாடு உண்டல்லவா?

தானதர்மம் என்ற பெயரில் வியாபாரமே நடக்கிறது.
கடவுளுக்கு இது அருவருப்பு!

நீங்கள் கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி:
நான் பிச்சை வாங்குபவனாயிருந்தால் எனது புகைப்படம் இவ்விதம் வெளியிடப்பட விரும்புவேனா?

பயனாளிகள் தங்கள் மதிப்பைக் காத்துக்கொள்ள உதவுவீர்.

ஒரு கேள்வி: பர்னபா கொடுத்தான் என்று சொல்லப்பட்டதேன்?

அப் 4:36,37

அவன் ''லேவியன்'' என்றாலும் உடைமையைக் கொடுத்தான் என்பதைச் சுட்டிக்காட்டவே!

பாலஸ்தீனத்தில் லேவியருக்கு நிலம்பொலம் இருக்கக்கூடாது.
இச்சட்டம் *''சீப்ரு''* போன்ற நாடுகளில் பொருந்தாமலிருக்கலாம்!
இது அவனது குடும்பச் சொத்தாகவும் இருந்திருக்கலாம்.

□ ''பெயர்ப் பலகைகள்'' வாக்குப்பண்ணும் விளம்பரங்களுக்குக் கவனம்!

கேட்கவேண்டியது : கடவுளது பலாபலனா, மனிதனது கைதட்டா?
(மத் 6:1,4ஆ)

- வரி ஏய்ப்புக்காக தானதர்மம் வேண்டவே வேண்டாம்!
  ஏழைக்குக் கொடுப்பது கர்த்தருக்குக் கடன்கொடுப்பதாம் —
  கருப்புப் பணத்தை அவர் ஏற்பாரா?

- உறுப்புகள் தானத்தை முன்பு குறிப்பிட்டோம்.
  உறுப்புகள் தானத்திற்காய் நீங்கள் செய்துள்ள பதிவு விபரங்களையும்,
  இறப்போ, மூளைச்சாவோ, உடனே செய்யவேண்டியதையும்
  உங்கள் குடும்பத்தினருக்குச் சொல்லிவையுங்கள்.

- இரகசிய ஈகையை இரகசிய ஜெபம் தொடரட்டும் —
  இத்தத்துவம் 2 கொரி 1:11இல் உண்டு.

உதவி பெற்றவரைத் தேவன் ஆசீர்வதிக்க வேண்டுங்கள்.
நீங்கள் கொடுத்ததோடு இறையருள் சேரட்டும்.
அந்நபரைச் சமாதானமும் ஆறுதலும் நிரப்பட்டும்.
நீங்கள் கொடுத்தது அவருக்குப் போதவில்லையெனில்,
வேறு சில வாசல்களையும் ஆண்டவர்
அவருக்குத் திறந்துவிடப் பிரார்த்தியுங்கள்.

**எப்படி உதவக்கூடாது?**

**8. பயனாளிகளைக் கடனாளிகளாக்கக்கூடாது.**

Do not bring the recipients under obligation.

■ உதவி பெற்றவரிடம் நாம் முதலில் எதிர்பார்ப்பது நன்றியே. இது சரிதான், நியாயந்தான், ஆனாலும் இறுதிக்கால உலகு நன்றியறியாமைக்குப் பெயர்பெற்றது (2 தீமோ 3:1,2இ).

இயேசுவுக்கே 10 சதவீதத்தினர்தானே நன்றியுடனிருந்தனர் —
லூக் 17:17 ... *''மற்ற ஒன்பது பேர் எங்கே?''* (வச 11-19)

தாம் பெருமிதங்கொள்ள அல்ல, *''கடவுளை மகிமைப்படுத்தவே''* இயேசு நன்றியறிவிப்பை எதிர்பார்த்தார் (வச 18,19)

நன்றியை நளினமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்;
நன்றி சொல்ல மறப்போரையோ கசந்துகொள்ளாதிருங்கள்.

அடுத்த முறை அந்நபர் உதவி நாடி வரும்போது முகம் சுளிக்காதீர்.

■ உதவி பெற்றோர் நீங்கள் விரும்புவதையெல்லாம்
செய்யவேண்டுமென்ற நிலைக்கு உட்படுத்தாதீர் —

இது கடவுளது குணம் அல்ல —
அப் 14:16,17 ... *நமது வழிகளில் நடக்கவிட்டு ...*
ஆனாலும் *மழையையோ சூரியவொளியையோ தடுக்காது ...*

எனவேதான் அவர் *''கடிந்துகொள்ளாது''* கொடுப்பவரென அறியப்பட்டுள்ளார் — யாக் 1:5

அதாவது, வெறுப்பு கிடையாது ...
குற்றங்காணல் கிடையாது ...
அதிருப்தி கிடையாது ...
கசப்பு கிடையாது ...
குற்றவுணர்வு உண்டாக்குவது கிடையாது.

■ எவரும் இன்னொருவருக்குக் கடன்பட்டவராயிருக்கக் கடவுள் விரும்புவதில்லை —

எனவேதான் இந்த அறிவுரை:

*"அன்பினாலன்றி கடன்படவேண்டாம்"* (ரோ 13:8)

காரணம்: *"உன்னைப்போல் உன் அயலானை நேசி"* (வச 9இ)

அதாவது, நாம் எவருக்கும் கடன்பட விரும்புவோமா?

மாட்டோம், அல்லவா?

உலகில் பொதுவாய்ச் சொல்லப்படுவது:

கடன் வாங்கியவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை!

எல்லாரையும் கடன்பட்ட நிலையிலிருந்து விடுவிக்க ஆண்டவர் நம்மை உந்தித்தள்ளுகிறார் —

எனவேதான் கர்த்தருடைய ஜெபம் இப்படியிருக்கிறது:

மத் 6:12 ... *"எங்கள் **கடனாளிகள்** ... எங்கள் **கடன்கள்**"*

லூக் 11:4 ... *"எங்கள் **பாவங்கள்** ... எங்கள் **கடனாளிகள்**"*

நாமோ, *"கடன்கள்"* என்ற சொல்லை,

நமது வசதிக்காக, *"குற்றங்கள்"* என்று மாற்றிக்கொண்டோம்!

*"பாவங்கள் ... குற்றங்கள்"* என்பவை இங்கு

உள்ளடங்கியிருந்தாலும் முக்கியமானது *"கடன்களே"* (மத் 6:14)

■ தேவையிலிருப்போருக்குப் பிரதிபலன் எதிர்பாராது உதவ வேண்டுமென்பதே திருமறைப் போதனை —

□ பிறர் நலம் நாடும் தன்னலமற்ற மனது

1 கொரி 10:24 ... *பிறரது நன்மை ...*

□ பவுலின் உயரிய வாழ்க்கை

2 கொரி 12:15 ... *எனது அதிக அன்பு ... உங்கள் குறைந்த அன்பு ... செலவுபண்ண ... செலவுபண்ணப்பட ...*

□ வேதபாரகர், பரிசேயரின் கெட்ட முன்மாதிரி

மத் 23:14 ... விதவைகளின் பணப்பையில்

கண் வைத்துக்கொண்டே ஜெபம்!

— எவரது பலவீனத்தையும் சாதகமாக்கி அவரை வசப்படுத்தாதீர்.

அதாவது, *''வஞ்சனையில்லாது ... இரக்கம் ... உற்சாகம்''*

ரோ 12:8இ,9அ

— உதவி பெறும் எளியவனிடம் கடுமையாய்ப் பேசாதீர்.

நீதி 18:23

— செய்த உதவிகளைச் சொல்லிக் காட்டாதீர்.

■ ஓர் **அடிமைகூட** நிறைய வெகுமதிகளோடு விடுவித்தனுப்பப்பட வேண்டுமென்பதே இறைக்கட்டளை — உபா 15:12-15,18

*''அது உனக்கு விசனமாயிருக்கவேண்டாம்!''* (வச 18)

இறையுள்ளத்தைப் பாருங்களேன்!

■ பொருளாதார உதவிகளில் மட்டுமல்ல, ஆன்மீகக் காரியங்களிலும் எவரையும் கடன்பட்டவராக்கி, அதிகாரம் செலுத்தக்கூடாது —

பின்வாங்கியவனைத் தூக்கிவிடுங்கள்;

அவனது பாவங்களை ஒலிபரப்பவேண்டாம்.

யாக் 5:19,20 ... *திருப்புகிறவன் ... திரளான பாவங்களை மூடி ...*

மென்மையாகவும், இரக்கமாகவும் நடந்துகொள்ளுங்கள் —

சங் 141:5 ... *குட்டுவது ... தலைக்கு எண்ணெய் ...*

கலா 6:1 ... *சாந்தமுள்ள ஆவி*

உங்களோடு அந்நபர் இரகசியமாய்ப் பகிர்ந்துகொண்டவற்றை வைத்து அவரைச் சாட்டையடிக்காதீர் —

அவரது இரகசியங்களை வைத்து அவரைப் பயமுறுத்தாதீர்.

■ உங்களுக்கு எதிராய்ச் செயல்பட்டவர் உதவி நாடி வந்தால், அவரைக் குற்றவுணர்வுக்குள்ளாக்காதீர் —

(உ-ம்) யோசேப்பு — ஆதி 45:4,5,8

*''நீங்கள் வருந்தவேண்டாம் ... அனுப்பியவர் தேவனே!''*

இன்னொரு குறிப்பு:

பிறரது துன்பங்களில் **ஈடுபடுங்கள்;**
ஆனால் வீண் தலையீடு வேண்டாம்!
(முக்கியமாக குடும்ப விவகாரங்களில்)
இதுவும் வசப்படுத்தும் தந்திரங்களில் ஒன்று

■ **முடிவான கருத்துக்கள்**

☐ உதவி பெறும் எளியவரிடமிருந்து நாம் எதுவும் எதிர்பார்க்கக்கூடாது; அதே வேளையில், அன்னாரிடமிருந்து உதவி ஏற்கத் தயங்கும் ஆணவமும் கூடாது!

அதைப் பணிவுடன் ஏற்பீர் — அவர்கள் மகிழ்வர்.
பிறரது கழுதை, படகு, மேலறை, இவைகளையெல்லாம்
இயேசு பயன்படுத்தவில்லையா?

ஓர் இக்கட்டில் நமக்குதவக் கடவுள் எளியவரைப் பயன்படுத்தலாம்:
பிர 9:14-16
*சிறு நகர் ... பெரிய மன்னன் ... ஏழை மனிதன் ...*
*விடுவித்தான் ... அவனை நினைக்கவில்லை*

☐ எவரிடமிருந்தும் உங்கள் பயனாளிகள் உதவிபெறச் சுதந்திரமளிப்பீர்;
உதவியவர், உதவிகள் பற்றிய விபரங்கள் அறியத் துடிக்காதீர்.

## 9. சோம்பேறித்தனத்தை ஊக்குவிக்கக்கூடாது.
Do not encourage laziness.

- உதவிக்கரம் நீட்டுவது சரி;
சோம்பேறித்தனத்தை ஊக்குவிப்பதோ சரியன்று.
நமது பயனாளிகளை முடமாக்கிவிடக்கூடாது.

- இதற்குத் திடமானதொரு திருமறைப் போதனை உண்டு :
2 தெச 3:10 ... *கட்டளை ... வேலை ... சாப்பாடு ...*

— அப்போஸ்தலர்க்கு ஏராளம் தேவைகளிருந்தன —
(உ-ம்) *"பசி ... தாகம் ... குளிர் ... போதுமான ஆடையின்மை"*
(2 கொரி 11:27)

ஆனாலும் அவர்கள் முன்மாதிரியாயிருக்க முயன்றனர் —
2 தெச 3:7-9 ... *பாரமாயிருக்கவில்லை*

- இருவித பாரங்களைத் திருமறை குறிப்பிடுகிறது —
கலா 6:5 ... *உங்கள் "பாரத்தைச்" சுமந்திடுங்கள்*
:2 ... *ஒருவர் "பாரத்தை" ஒருவர் சுமந்திடுங்கள்*

அதாவது, நமக்கு நாமே உதவிட நம்மால் முடிந்த யாவும் செய்யும்வரை பிறர் உதவி நாடுவது நியாயமல்ல.

புத்திமதிகள்:
உங்களுக்கு நீங்களே உதவினால் பரலோகம் உங்களுக்குதவும்.
தங்களுக்குத் தாங்களே உதவுவோருக்கே கடவுள் உதவுவார்.

- தரித்திரத்திற்கான காரணங்களில் தவிர்க்க முடிந்ததை ஏழைகள் அகற்றவேண்டும் —

நீதிமொழிகள், 19:17 ... *ஏழைக்கு இரங்குகிறவன் ... கர்த்தருக்கு ...*

இதே புத்தகத்தில் தரித்திரத்திற்கான முக்கிய காரணங்கள்:
நீதி 13:18 ... ஒழுக்கமின்மை
20:13 ... சோம்பேறித்தனம் / அதிகத் தூக்கம்

21:17 ... சிற்றின்பம், ஊதாரித்தனம்

23:21 ... குடிபோதை, பெருந்தீனி

- இன்னும் சிலர், வேலைத்தலத்தில் எல்லா வசதியும் சொகுசும் இல்லையேல், வேலை செய்யமாட்டார் —

  நீதி 20:4 ... *குளிரில் உழமாட்டான் ... பிச்சை ...*

  கரங்கள் அழுக்காகாமலேயே வேலை செய்ய விரும்புவர் —
  ''பட்டினி'' கிடந்தாலும், தலைக்கனத்தினால்,
  சாதா வேலைகளைச் செய்யமாட்டார்.
  இவர்களுக்கு வேலையின் கண்ணியத்தைப் போதிக்கவேண்டும்;
  "Dignity of labour"
  எந்த வேலையும் மற்றதைவிடக் குறைந்ததோ உயர்ந்ததோ இல்லை.

- ஏழைகளுக்குத் தேவை ''நிவாரணம்'' (relief) மட்டுமல்ல,
  ''மறுவாழ்வும்'' (rehabilitation) அவசியம் —

  மீனைக் கொடுத்தால் ஒரு நாள் பசியடங்கும்;
  மீன்பிடிக்கக் கற்றுக்கொடுத்தாலோ என்றும் உதவும்.

  நிவாரண மற்றும் மறுவாழ்வு நிறுவனங்களைச் சந்தித்து
  மறுவாழ்வுத் தத்துவங்கள், திட்டங்களைக் கற்றிடுங்கள்.

  உங்கள் திறனுக்கேற்ப சிறுசிறு வேலைகள் கொடுங்கள் —
  (உ-ம்) பிச்சைக்காரனை வீட்டின் முற்றத்தைப் பெருக்கச் சொல்லி ஒருவேளை சாப்பாடு கொடுக்கலாம்;
  வாகனங்களைத் துடைக்கச் சொல்லலாம்.

  ரூத்தின் சரிதையில் இத்தத்துவம் தெளிவு —

  விதவையான நகோமி ஆகாரம் தேடி இரு மருமகள்களுடன்
  மோவாபிலிருந்து யூதா தேசம் வந்தாள்.

  தேவாதீனமாக, போவாசின் வயலுக்கு ரூத் சென்றபோது
  அவன் செய்தது —

  ரூத் 2:15,16,17

காலை முதல் மாலை வரைரூத் ''ஒரே'' எப்பா வாற்கோதுமைதான் பொறுக்கினாள். (கொளுத்தும் வெயிலில்!)

அடுத்த நாள்தான்,
அவளுக்குப் போவாஸ் ''ஆறு'' எப்பா கொடுத்தான் (3:15)
ஒன்றும் ஆறும் ஏழாயிற்று!

■ தரித்திரத்தினால் திருடத் தொடங்கியவர்களும் உண்டு —
இது சாத்தியமென்கிறது திருமறை:

நீதி 30:8,9 ... *தரித்திரம் ... திருடி ... தேவனுக்கு அபகீர்த்தி*

எபேசியர் நிருபத்தில் பவுல் கீழ்க்கண்டவாறு எழுதியபோது
இதை மனதிற்கொண்டிருந்திருக்கலாம் —

எபே 4:28 ... *இனித் திருடாமல் ... வேலைசெய் ... கொடு* ...

■ யாசித்தலைத் திருமறை முழுமையாய்க் குற்றப்படுத்தவில்லை.
அது விரும்பத்தகாததாயிருந்தும்,
பலர் அதற்குத் தள்ளப்படுகின்றனர் —

இந்தியாவில் இது உண்மை —

இந்தியாவில் நடப்பது யோபுவில் படம்பிடித்துக் காட்டப்படுகிறது —

யோபு 24:1-12 (யோபுவின் வார்த்தைகள்)

:4 ... *சாலையைவிட்டு விலக்கி* ...
:10 ... *ஏழையை ஆடையில்லாது விரட்டி* ...
:12 ... *ஊரில் குற்றுயிராய்த் தவித்து* ...

பிச்சைக்காரரை அசட்டைபண்ணாதிருங்கள்.
அவர்களைத் துச்சமாய் எண்ணி முகம் சுளிக்காதிருங்கள்.
அவர்களிடம் கனிவாயிருங்கள் —

☐ குருடன் பர்திமேயுவிடம் இயேசு (மாற் 10:46)

*அமைதியாயிருக்கும்படி மக்கள் அவனை அதட்டினர்;*
*இயேசுவோ அங்கே அவனுக்காய் நின்றார்* (வச 47-49)

☐ செல்வந்தனும் பிச்சைக்காரன் லாசருவும் (லூக் 16).
செல்வந்தனின் பெயர் சொல்லப்படவில்லை!
நம்மிடம் அடிக்கடி வரும் பிச்சைக்காரரின் பெயர்கள்
நமக்குத் தெரியுமா?

☐ ஆதிச்சபையின் முதல் சுகமளிப்பு அற்புதம்
ஒரு பிச்சைக்காரனுக்குத்தான் (அப் 3)

அங்கவீனப் பிச்சைக்காரரைச் சுகமளிப்பு கூட்டங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள் —

*''ஒருவரும் எனக்கு உதவவில்லை!''* (யோ 5:1-15) பெதஸ்தா

திரள்களின் நடுவில் இயேசுவிடம் நால்வர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்து சென்றதுபோல (மாற் 2:3-5) —
மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்யுங்கள்

☐ விசுவாசிகளில் சிலரும் பிச்சைக்காரர்போல் இருக்கக்கூடியதை அப்போஸ்தலன் யாக்கோபு சுட்டிக் காட்டுகிறான் (யாக் 2:15,16)

*''சகோதரனாவது சகோதரியாவது ... உணவுடை இல்லாது ... ''*
*சமாதானத்தோடே ''போங்கள்''* என்று துரத்தக்கூடாது.

■ ஊனமுற்றோரிடம் கூடுதல் இரக்கம் காட்டுங்கள் —

இன்று அவர்கள் கண்ணியமாய் ''மாற்றுத் திறனாளிகள்'' (differently abled) என்றழைக்கப்படுகின்றனர்.

இரக்கம் என்பது காது கேளாதோர் கேட்கக்கூடியதும், கண் தெரியாதோர் பார்க்கக்கூடியதுமான மொழியாம்!

■ அனைத்துக்கும் ''ஊற்றானவராகிய'' தேவனையே எளியவர் பார்க்கப் பழக்குங்கள் —

(உ-ம்) சமாரியாவில் பெரிய பஞ்சம்

2 இரா 6:25-27 ... *''**கர்த்தர்** உனக்கு உதவாவிடில் ...?''*
*''**இரட்சிப்பின்** தேவனாகிய''* ''ஏழைகளின் தேவனிடம்''
அவர்களை வழிநடத்துங்கள்! (லூக் 1:47,53)

## 10. தானதர்மம் செய்வதில் தளரவே கூடாது.

Do not grow tired of charity.

- பக்திமுயற்சி எதுவாயினும் நாளாவட்டத்தில்
  அதில் தளர்வு ஏற்படுவது சாதாரணமே —
  (உ-ம்) இயேசு: *''சோர்ந்துபோகாமல் ஜெபம்''* (லூக் 18:1)

  இதற்குத் தானதர்மமும் விதிவிலக்கல்ல —
  கலா 6:9,10...*நன்மை செய்வதில் சோர்ந்துபோகாமல்...வாய்ப்பு ...*
  எவ்வளவு காலம்? *''வாய்ப்பு''* இருக்கும்வரை! (வச 10)
  அதாவது, எளியவர்க்குத் தேவை இருக்கும்வரை!

  எளியவர்க்குதவ எவ்வளவு காலம் தேவையிருக்கும்?
  ப.ஏ. உபா 15:11 ... *நாட்டில் எளியோர் இல்லாதிருப்பதில்லை*
  பு.ஏ. யோ 12:8 ... *தரித்திரர் எப்பொழுதும் உங்களுடன் ...*

  மக்கள் நன்றி மறக்கலாம் ...
  நாம் செய்வதற்குப் பாராட்டு கிடையாமல் போகலாம் ...
  ''தேவனோ'' நமது இரக்கச் செயல்களை மறவார் —
  எபி 6:10 ... *நீங்கள் செய்ததை ... செய்வதை ...*
  *மறக்க அவர் அநீதியுள்ளவரல்ல*
  எனவே, *''முடிவுவரை'' அதே உற்சாகம் ...* (வச 12)

- பொது நற்பண்புகளில் வளர்வது குறித்துப் பேச
  எவரும் தயங்குவதில்லை;
  தானதர்மம் என்று வரும்போதோ எவ்வளவு தயக்கம்!

  ஆனால் பவுலோ: 2 கொரி 8:7 ... *இந்தக் கிருபையிலும் ...*
  ''இந்தக் கிருபை'' எது? ''எளியவரைத் தூக்கிவிடுதல்'' —
  வச 9 ... இயேசு போல!
  *நம்மைச் செல்வந்தராக்க இயேசு ''தரித்திரர்'' ஆனார்!*

இயேசுவை இங்கு மாதிரியாய் நிறுத்துவது, அவர் தமது ''விண்ணக'' மகிமையைத் துறந்ததற்கு அடுத்ததாயினும், பேசப்படும் காரியம் ''தானதர்மம்'' ஆகும்.

உங்களைப் பாதிக்கும்வரை கொடுத்துக்கொண்டேயிருங்கள்!

(உ-ம்) லூக் 11:41இல் நமக்கு *''இருப்பதில்''*
பிச்சை கொடுங்கள் என்றார் இயேசு;
12:33இலோ நமக்கு இருப்பதை *''விற்றுப்''*
பிச்சை கொடுக்கச் சொல்லுகிறார்!
ஆம், தானதர்மத்தில் வளர்ந்துகொண்டேயிருக்கவேண்டும்.

■ தானதர்மப் பள்ளியில் பல நிலைகள் —
பாலர் பள்ளி: ஒன்றும் கொடுக்கமாட்டார்கள்
துவக்கப் பள்ளி: கேட்டால்தான் கொடுப்பார்கள்
உயர்நிலைப் பள்ளி: சட்டப்படி கொடுப்பார்கள்
கல்லூரி: தியாகமாய்க் கொடுப்பார்கள்
நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

■ எப்படியெல்லாம் சேமிக்கலாம் என்றல்ல,
எப்படியெல்லாம் கொடுக்கலாம் என்று கண்டுபிடியுங்கள்!
ஏசா 32:8 ... *''தயாளமானவைகளை யோசிக்கிறான்''*

■ ''நான் ஏற்கனவே எவ்வளவோ உதவிவிட்டேன்''
என்று ஒருபோதும் நினைக்காதீர் —
பிர 11:1,2 ... *ஆகாரம் ... ஏழுபேர் ... எட்டுபேர் ...*
முந்திய அத்தியாயத்தில் பார்த்தது: சோம்பேறித்தனம்
2 தெச 3:10,13 ... ஆனாலும் நிறுத்தாதீர்!

■ நாம் ஏற்கக்கூடாத இன்னொரு எண்ணம்:
''உலகம் முழுவதற்கும் நான் உதவமுடியுமா?''
அன்னை தெரசாவின் பதில்: ''ஒவ்வொருவருக்காய் உதவுவேன்!''
ஆம், உலகிலுள்ள எல்லாருக்கும் நீங்கள் உதவிடமுடியாது;
ஆனால் நீங்கள் செய்யக்கூடியது ...

— **உங்கள்** வாசலில் கிடக்கும் லாசருக்கு உணவு
— **உங்கள்** சாலையில் அடிபட்டவனுக்கு உதவி
— **உங்கள்** சபையிலுள்ள எளியவர்க்கு ஆதரவு
— **உங்கள்** வேலைத்தலத்திலுள்ள பலவீனரைத் தாங்குதல்

■ ''நித்திய'' பலாபலன்களே நம்மை உந்தித்தள்ளவேண்டும்.
தானதர்மத்திற்காக இவ்வுலகில் நன்மை கிடையாது போகலாம்;
நித்தியத்திலோ பலாபலன் நிச்சயம் —

☐ லூக் 6:35 ... பலாபலன்: ***உன்னதமானவருக்குப்*** *பிள்ளைகள்*
☐ லூக் 12:33 ... பரலோக வங்கியில் சேமிப்பு
*''திருடன் ... பூச்சி''* — சுவிஸ் வங்கிகூட திவாலாகலாம்!

எளியவர்க்குக் கொடுக்கக் கொடுக்க
நம்மில் பரலோகச் சிந்தை கூடும் —
வச 34 ... *பொக்கிஷம் ... இருதயம் ...*

☐ லூக் 16:9 ... விண்ணில் நண்பர்கள்!
என்னே வரவேற்பு!
இச்சத்தியம் வேதத்தில் பரவியிருக்கிறது.

☐ லூக் 18:22 ... *விற்று ... கொடு ... விண்ணில் பொக்கிஷம்*
இதைத் தொடர்ந்துதான், ஆண்டவர்
ஒட்டகம்-ஊசியின் எடுத்துக்காட்டைச் சொன்னார் (வச 25)

படிப்பினை: (இந்திய ரயில் பெட்டிகளில் எழுதப்பட்டுள்ளது)

*Less Luggage,*
*More Comfort,*
*Make Travel a Pleasure!*

*குறைந்த சாமான்,*
*நிறைந்த வசதி,*
*பயணத்தை இனிதாக்குக!*

லூக்கா சுவிசேஷத்தில் எத்தனை குறிப்புகள், பாருங்கள்! —
ஆம், ஒரு மருத்துவனான அவனுக்கு மனிதாபிமானம் அதிகம்!
செல்வந்தன்-லாசரு கதையும் லூக்காவில்தான் (லூக் 16)

- பவுலின் போதனை:
  - ☐ 1 தீமோ 6:18,19 ... *நற்செயல்களில் செல்வந்தர் ...*
    *வருங்காலத்திற்கு அடித்தளம் ...*
  - ☐ 2 கொரி 9:6 ... *அறுப்பான்* (நித்தியத்தில்).
    இது தர்மசகாயம் பற்றிய அத்தியாயம்
    :9 ... *வாரியிறைத்தான் ... ஏழைகள் ... நீதி ...*
    *என்றென்றும்!* (சங் 112:9இல் உள்ளது)
- ஜான் வெஸ்லி:

  ''எல்லாவற்றையும் நித்தியத்தின்
  பார்வையிலேயே மதிப்பிடுகிறேன்!''

- ஒரு பழைய கல்லறைமீது செதுக்கப்பட்டிருந்தது —

  நான் செலவழித்தது எனக்கு இருந்தது;
  நான் சேமித்ததை இழந்தேன்;
  நான் கொடுத்ததோ எனக்கு இருக்கிறது!

- **முடிவுரை**

  *''அவர்களது செயல்கள் அவர்களைப் பின்தொடரும்''*
  வேறெதுவும் நம்மோடு வராது! (வெளி 14:13இ)

  கடைசி நாளில் நாம் அனுப்பப்படுவது
  வலது பக்கத்திற்கா இடது பக்கத்திற்கா
  என்று இன்றே தீர்மானிப்போம்! (மத் 25)

(பார்க்க: பக்கங்கள் 34-37, 248-250, 423-425, 560-562)